வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 93

திங்கட்கிழமை 27 பெப்ரவரி 2023 | மாசி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

## இந்தியர்களுக்கு அனுமதி வழங்கினால் இழுவைமடிப் படகுகளே இங்கு வரும்

### எச்சரிக்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 27
தமிழக மீனவர்கள் அனுமதிபெற்று மீன்பிடிக்கும் முறைமையை அனுமதித்தால் அவர்கள் »11

## வடக்கு மீனவர்களுக்கு பாதிப்பில்லாது தீர்மானம்

### அரசியல் ஆதாயம் தேடவேண்டாம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 27
இந்திய மீனவர்கள் அனுமதிபெற்று வடக்குக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பான விடயம் இன்னமும் பரிசீலனையிலேயே உள்ளது. வடக்கு மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே நாம் தீர்மானத்தை மேற்கொள்வோம் – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். »11

## அரசியல் பேச்சுக்கள் கச்சதீவில் வேண்டாம்!

### வடபகுதி மீனவர்கள் ஆயர்களுக்கு அழுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 27
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது மீனவர் பேச்சுக்கள் என்ற »11

## பெற்றோல் விலை அதிகரிப்பு: ‘கியூ.ஆர்’ முறைமை ஒழிப்பு

### திட்டம் இதுதான் என்கிறார் காஞ்சன

கொழும்பு, பெப். 27
எதிர்காலத்தில் ‘கியூ.ஆர்’ முறை ஒழிக்கப்படும். அதேவேளை, பெற்றோலின் விலையில் »11




இலங்கைக் கடலில்

## இந்திய மீனவர்களுக்கு அனுமதி வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பு

### ஜனாதிபதியுடன் பேச்சுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கு கடலில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் இலங்கை அரசாங்கத்தின் திட்டத்தை வடக்கு மீனவர்கள் அடியோடு நிராகரித்துள்ளனர். இந்தத் திட்டத்தை மீள்பரி »10

## இந்திய மீனவர்களை அனுமதித்தால் மீண்டும் மலேரியா தலைதூக்கும்

### வடக்கு மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதித்தால் நாட்டில் மீண்டும் மலேரியா தலைதூக்கும் ஆபத்து இருக்கின்றது என்று மன்னார் மாவட்ட மீனவர் பிரதிநிதி ஆலம் கருத்து வெளியிட்டுள்ளார். »11



## பேருந்து மோதி ஒருவர் சாவு!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, பெப். 27
யாழ்ப்பாணம்-கண்டி வீதியில், மூன்று முறிப்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேருந்து-துவிச்சக் கரவண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். »11

தேர்தலை நடத்தக்கோரி கொழும்பில்

## ரணிலுக்கு எதிராக குவிந்தனர் மக்கள்

### மூர்க்கமாக அடக்கிய ஆயுதப்படைகள் 28 பேர் வரை மருத்துவமனையில்

கொழும்பு, பெப். 27
‘தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு’ என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று ரணில் அரசுக்கு எதிராகப் பெரும் »11

## ஆவணத்தை தேடியே அனலைதீவில் கனேடியப் பிரஜைகள் மீது தாக்குதல்

### படகு மூலம் தப்பிச் சென்ற தாக்குதலாளிகள்

யாழ்ப்பாணம், பெப். 27
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கனேடியப் பிரஜைகளைத் தாக்கி பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் »11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2023
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவைப் பிரதமராக்க தீவிர முயற்சி முன்னெடுப்பு

## சன்ன ஜயசுமண தெரிவிப்பு



கொழும்பு, பெப். 27

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்தவைப் பிரதமராக்கு வதற்கு தீவிரமான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு ஆளுங்கட்சியிலுள்ள பலர் எங்களிடம் ஆதரவு கோரியுள்ளனர். பிரதமர் பதவியை மாற்றுவதற்கு திட்டமிருப்பதாக ஆளும் கட்சியினர் பலர் எம்மிடம் தெரிவித்தனர்.

தலையணையை மாற்றினால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இந்த ஒட்டுமொத்த அரசாங்கமும் வீட்டுக்குச் செல்லவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

பிரதமரை மாற்றுவதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது - என்றார். (ம)

# மின் விநியோகத்தில் மீள நெருக்கடியாம்!

## மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

மின்சாரசபையில் பொறியியலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியான மின்விநியோகத்தை வழங்கமுடியாது என மின்சார சபை பொறியியலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் இணைச்செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன தெரிவித்ததாவது:

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையில் பொறியியலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் இந்தச் சிக்கல்நிலை உருவாகியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் மின்சாரசபையின் 72 பொறியியலாளர்கள் கடந்த ஒரு வருடத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிந்தவர்கள். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால், தற்போது 100 பேரே பணிபுரிகின்றனர். இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய சூழ்நிலைகூட ஏற்படலாம். அவ்வாறு நடந்தால் மின் நெருக்கடி கடுமையாகும் - என்றார். (ச)

# பிரதமரை மாற்றுவதற்கு எந்தத் திட்டமுமில்லை!

## பெரமுனவின் பொதுச்செயலர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

பிரதமரை மாற்றுவது தொடர்பில் எந்தவிதமான முயற்சிகளையும் நாம் முன்னெடுக்கவில்லை. எமது கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் மூன்றாந்தர அரசியல் செய்கின்றனர் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பிரதமராக மீண்டும் மஹிந்த ராஜபக்சவை நியமிப்பதற்கு பொதுஜன பெரமுனவினர் முயற்சிகளை முன்னெடுப்பதாக பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்திருந்த நிலையிலேயே சாகர காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறியுள்ள ஒரு அணியினர் தற்போது அநாதரவாக நிற்கின்றார்கள். அவர்கள் தமது அரசியலை வளர்த்துக்கொள்ளவும், அன்றாட பிரபல்யத்துக்காகவும் வெவ்வேறு சூட்சுமங்களைக் கையாள்கின்றார்கள். அதிலொன்றுதான், மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராக்குவதற்கு முனைகின்றோம் என்ற கருத்தாகும்.

அவர்கள் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகியவுடன், கட்சியையும், அதன் மூத்த அங்கத்தவர்களையும் வைத்து புனைகதைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமது இயலாமையினால், மூன்றாந்தரமான அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சன்ன ஜனசுமணவிடத்தில் யாராவது அணுகியிருந்தால் அதுபற்றிய முழுமையான விவரங்களை அவர் வெளியிடவேண்டும் - என்றார். (ம)

# இருதரப்புப் பாதுகாப்புக் குறித்து இலங்கை - இந்தியா பரிசீலனை

கொழும்பு, பெப். 27



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்யும் புதிய வழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்திய மற்றும் இலங்கையின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையிலான வருடாந்தச் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை முதல் கடந்த சனிக்கிழமை வரையில் புதுடில்லியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே இருதரப்புப் பாதுகாப்புக் குறித்து பல்வேறு இணக்கங்கள் எட்டப்பட்டுள்ளன. (ம)

## போதைப்பொருள் பாவனை

# சிவனொளிபாதமலையில் 15 இளைஞர்கள் கைது!

கொழும்பு, பெப். 27


சிவனொளிபாதமலை ஏறுவதற்கு பலவகையான போதைப்பொருள்களுடன் சென்ற 15 இளைஞர்கள் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இளைஞர்கள் கொழும்பு, காலி, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள். ஹெரோய்ன், கஞ்சா, கஞ்சா கலந்த புகையிலை மற்றும் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகள் என்பன கைதானவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)

## மின் கட்டணச் சுமை

# இருளில் தள்ளப்படும் நடுத்தரக் குடும்பங்கள்

கொழும்பு, பெப். 27



புதிய மின்சாரக் கட்டணத் திருத்தத்தால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உட்பட பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்கள் பலவும் மின்துண்டிப்புக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மின்சாரக் கட்டணம் நிலுவையிலுள்ள 6 லட்சத்துக்கு அதிகமான மின்பாவனையாளர்களுக்கு மின்சார விநியோகம் எதிர்வரும் காலங்களில் துண்டிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின்சாரத் துண்டிப்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களே அதிகளவில் பாதிக்கப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள அதேநேரம் பழைய முறையிலான மின்கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலையில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில் மின் துண்டிப்பு என்பது அந்தக் குடும்பங்களைப் பெரிதும் பாதிப்பதுடன் புதிய கட்டண முறைமை, அவர்களையும் அவர்களைச் சார்ந்தோரையும் நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது.

பாவனையாளர்கள் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் மின்துண்டிப்பை மேற்கொள்ளும் மின்சாரசபை, மின்னிணைப்பை மீளப்பெறுவதற்கான கட்டணத்தையும் அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சாரசபையின் மின்கட்டணம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட விதிப்பனவுகள் காரணமாக மின்பாவனையாளர்களின் மின்கட்டணச் சுமை அன்றாடம் அதிகரித்து வருகின்றது. எதிர்காலத்தில் மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் கட்டணங்கள் அதிகரிக்கும் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டால், அந்தக் கட்டணங்களைச் செலுத்துவது எதிர்காலத்தில் மேலும் குறையலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மே 9 வன்முறையில் 18 பேருந்துகள் சேதம்

கொழும்பு, பெப். 27

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது இ.போ.சவின் 12 டிப்போக்களுக்குச் சொந்தமான 18 பேருந்துகள் கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்ட கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பேருந்துகளின் மதிப்பீடு 7 கோடியே 67 லட்சத்து 49 ஆயிரத்து 438 ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சபைக்குச் சொந்தமான 3 வாகனங்களும் சேதமடைந்துள்ளன. அவற்றின் பெறுமதி 73 லட்சம் ரூபா என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உணவூட்ட 4.5 மில். டொலர் தேவை

## உலக உணவுத் திட்டம் அறிக்கை

கொழும்பு, பெப். 27
இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 4.5 மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது என்று உலக உணவுத்திட்டம் அறிக்கையிட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தால் வெளியிடப்பட்ட மாதாந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் மீட்சியடையவில்லை. அதன் விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெவ் அமைப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு சர்வதேசப் பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கிவருகின்றன.
உலக உணவுத்திட்டம் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 6 லட்சத்து 36 ஆயிரத்து 125 பேருக்கு அவசியமான உதவிகளை வழங்கியுள்ளது. இதுவரையான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மொத்தமாக 7 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 557 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் வரையான 6 மாதகாலத்துக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு 4.5 மில்லியன் டொலர் நிதி அவசியமென மதிப்பிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-இ)

# நிலநடுக்க எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது

கொழும்பு, பெப். 27
இமயமலை அல்லது இந்தியாவின் வடக்கு பிராந்தியத்துக்கு அருகில் நிலநடுக்கம் ஏற்படலாம் என்ற அனுமானங்களை விலக்கிக் கொள்வதாக இலங்கையின் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.
இந்தியாவின் வடக்குப் பகுதியில் சுமார் 8 மெக்னிடியூட் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படச் சாத்தியம் உள்ளது என்றும் இதனால் இலங்கைக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் அந்த எச்சரிக்கை தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளது. (ம)

# சஞ்சிகைகள் இருப்பின் உடன் தந்துதவுங்கள்!

## கோப்பாய் கலாசாலை கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியிடப்பட்ட முன்னைய சஞ்சிகைகள் மற்றும் அவற்றின் பிரதிகள் இருப்பின் கலாசாலை நூலகத்துக்கு தந்து உதவுமாறு கலாசாலை நிர்வாகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கோப்பாய் கலாசாலை நூற்றாண்டைக் காணும் தருணத்தில் கலாசாலையுடன் தொடர்புடைய வெளியீடுகள் ஆவணப்படுத்தப்படவுள்ளன. அதற்கமைய கலாசாலையால் முன்னைய காலங்களில் வெளியிடப்பட்ட தற்போது நூலகத்தில் இல்லாத நூல்கள் மற்றும் பிரதிகள் சேகரிக்கப்படவுள்ளன. 1923ஆம் ஆண்டுக்கும் 1974 க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பற்றிய தரவுகள் மற்றும் நூல்கள் ஆகியன கலாசாலை நூலகத்தில் இல்லை. அத்துடன் கலைமலர் 18, கலைமலர் 19 (1977 - 1978) கலைமலர் 22 (1981) கலைமலர் 28, கலைமலர் 29, கலைமலர் 30 (1990 - 1998 இடையில்) கலைமலர் 34 (2002) ஆகிய கலைமலர் சஞ்சிகைகளும் நூலகத்தில் இல்லை. கலாசாலையில் கற்ற முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் இவை இருப்பின் கலாசாலைக்கு 0212230323 என்ற இலக்கத்தினூடாக அறியத் தந்தால் நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும் என கலாசாலையின் அதிபர் ச.லலீசனால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# மின்னல் தாக்கி ஒருவர் சாவு!

கொழும்பு, பெப். 27
குளித்துக் கொண்டிருக்கும்போது மின்னல் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் இரத்தினபுரி - களவான பேபொட்டுவ கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.
இரும்பினாலான கொள்கலனில் தண்ணீர் நிரப்பி விட்டுக் குளித்து கொண்டிருந்தபோதே அவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் என களவான பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# இலங்கையின் கடன் விவகாரம்; ஒழுங்கான நடைமுறை தேவை

## நாணய நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27
இலங்கையின் கடன் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு பொதுக்கட்டமைப்பின் கீழ் சரியான ஒழுங்குமுறை அவசியம் -இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.
ஜி-20 அமைப்பின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தின் பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
இலங்கையின் கடன் விவகாரத்துக்குச் சரியான நேரத்திலான ஒழுங்கான நடைமுறைகள் அவசியம். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள அவசர கடனுக்கான நிபந்தனையாக கடனாளிகளிடமிருந்தும் கடன்குறைப்பை முன்வைத்துள்ளது. இலங்கை தனது கடனாளிகளிடமிருந்து கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நிதி உத்தரவாதங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு வழியேற்படுத்தவேண்டும். அந்தவகையில் கடன் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு பொதுக் கட்டமைப்பின் கீழ் சரியான நேரத்தில் ஒழுங்கான நடைமுறைகள் அவசியம் - என்றுள்ளது. (ச-இ)

# கேலிக்கூத்தாகியுள்ளது மக்களின் ஜனநாயகம்

## அநுரகுமார சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 27
மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் இல்லை என்பதனாலேயே நாட்டு மக்களின் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஜனநாயகத்துக்கும், அரசமைப்புக்கும் எதிராகச் செயற்படும்போது ஏற்படும் விளைவை வெகு விரைவில் அவர் விளங்கிக்கொள்வார் -இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவையில்லை. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பு இதுவரை விடுக்கப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் ஐக்கிய தேசியக் கட்சி எதற்காகத் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தி வேட்புமனுத் தாக்கல் செய்தது. இல்லாத தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏன் தயாராகவேண்டும். இதற்கு கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூறவேண்டும். உள்ளூர்ர்ட்சிமன்றத் தேர்தலுக்கு நிதி இல்லை என ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக தேர்தலுக்கு நிதியொதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி எங்கே? தனது அரசியல் தேவைகளுக்காக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை இல்லாதொழித்து மக்களை கேலிக்கூத்துக்கு உள்ளாக்கியுள்ளமை பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது. இந்த முறையற்ற செயற்பாடுகளுக்கு நீதிமன்றத்தின் ஊடாக பதிலடி கொடுக்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## ரஷ்யாவுக்கு எதிரான பிரேரணை

# ஐ.நா. வாக்கெடுப்பில் நழுவியது இலங்கை!

உக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்துமாறும், உக்ரைனிலிருந்து உடனடியாக வெளியேறுமாறும் வலியுறுத்தி ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை கலந்துகொள்ளாமல் நழுவியது.
ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி பீற்றர் ராம் சோரும் தனது இலங்கைப் பயணத்தின் போது இலங்கையை இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு கோரியிருந்தார். எனினும் இலங்கை வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் அதைப் புறக்கணித்தது. பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி, கனடா உள்ளிட்ட 141 உறுப்பு நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், ரஷ்யா, பெலாரஸ், கொரியா, எரித்திரியா, மாலி, நிகரகுவா, சிரியா ஆகிய 7 உறுப்பு நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. இதேவேளை- இலங்கை, சீனா, பாகிஸ்தான், கியூபா உள்ளிட்ட 32 உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை மாய்ப்பதற்கு நிர்ப்பந்திக்கிறதா அரசு?

## மன்னார் விவசாயிகள் ஆதங்கம்



மன்னார், பெப். 27
நெல்லுக்குரிய நிர்ணய விலை, பொருளாதார விலையேற்றம், விவசாயத்துக்குப் பெற்ற கடன்களைக் கட்டமுடியாத நிலை போன்றவற்றால் தாம் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட விவசாயிகள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக பயிர்ச்செய்கைக்கான அறுவடைகள் அரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்துக்கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நெல்லுக்கு உரிய நிர்ணய விலை இல்லாத காரணத்தால் விவசாயம் செய்வதற்குப் பெற்ற கடன் பொருள்களுக்கான விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றை நினைக்கும்போது அடுத்த கட்ட வாழ்க்கை பற்றி நினைக்க முடியாதுள்ளது.

விவசாயத்துக்கான உழவு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து உரம், கிருமிநாசினி மிகைப் படுத்தப்பட்ட செலவுகள், அறுவடையின் பின் நெல்லுக்கான நிர்ணய விலை இல்லை என்றால் விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்களின் நிலை என்ன? பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். தற்போது தனியார் முதலாளிகள் சிவப்பு நாடு வகைகள் 5 ஆயிரத்து 500 ரூபாவும் சம்பா 6 ஆயிரம் ரூபா வரையும் கொள்வனவு செய்கிறார்கள். அரசாங்கம் நிர்ணயித்த விலையும் அடிமாட்டு விலையாக உள்ளது.

தற்போதைய சூழலில் ஒரு கிலோ நெல் 130 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டால் மாத்திரமே ஓரளவுக்கேனும் விவசாயிகள் கடன் மற்றும் வாழ்க்கைச் செலவில் இருந்து உயிர்தப்ப முடியும்.

இல்லையெனில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை.

எனவே அரசாங்கம் விவசாயிகளின் நிலையைப் புரிந்துகொண்டு இதற்கான தீர்வை விரைவில் மேற்கொண்டு ஒரு கிலோ நெல்லை 130 ரூபாவுக்கு அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டும் - என்றனர். (ஓ-14-213)

## அன்பு அனைத்தையும் சாதிக்கும்




அழுக்கான உடையும், அருவருப்பான தோற்றமும் உடைய இரப்போன் ஒருவன் பாதையோரம் அமர்ந்திருந்து அவ்வழியால் செல்வோரிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். பயணிகள் அவனை ஏறெடுத்தும் பாராது எட்ட நின்று பணத்தை வீசிவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஆன்மிகவாதியொருவர் அவனுக்குப் பணம்கொடுக்க சட்டைப் பைக்குள் கையைவிட்டார். பணமேதும் இருக்கவில்லை. உடனே இரப்போனின் அருகே சென்று அவனது கையைப் பிடித்து 'சகோதரா இன்று என்னிடம் பணம் தீர்ந்துவிட்டது. நாளை தருகிறேன் கவலைப்படாதே" என்றார். அவனோ "ஐயா, நீர் எல்லோரையும் விட பெறுமதியானதை எனக்குத் தந்துள்ளீர். எவரும் என்னை ஒரு பொருட்டாக எண்ணாத வேளையில் என்னை உமது சகோதரனாக்கி அன்பையும் ஆறுதலையும் தந்துள்ளீர். கடவுள் வடிவில் நீர் எனக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளீர்' என்றான்.

பணத்தாலும் பட்டம் பதவியாலும் சாதிக்க முடியாததை அன்பின் தொடுகையால் போதித்து சாதனையாக்க முடியும். அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார். கைவிடப்பட்டோருக்கு கலங்கரை விளக்காவோம். துன்புறுவோருக்கு துயர் துடைக்கும் அன்புக் கரங்களாவோம். சிறைப்பட்டோருக்கு விடுதலைக் குரலாவோம். இதுவே அவர்களும் நாமும் இறைவனைச் சந்திக்கும் இனிய களமாகும்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# 'உள்ளம் பொற்கிழி' பரிசுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 27
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி இளையோரை ஊக்குவிக்கும் முகமாக உள்ளம் சஞ்சிகை மாபெரும் பொற்கிழிப் பரிசுப் போட்டியை நடத்தவுள்ளது.

கலை, இலக்கிய,சமூக, கலாசாரத் துறைகளிடையே நடத்தப்படும் இந்தப் போட்டிகள் மற்றும் தெரிவுகளுக்கு ரூ.1.2 மில்லியனுக்கும் அதிகமான பணப்பரிசில் மற்றும் பெறுமதிவாய்ந்த 75க்கும் மேற்பட்ட பொற்கிழிப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் மற்றும் மொழிபெயர்ப்பு, ஓவியப்போட்டி, புத்தாக்கம், சுயதொழில் குடிசைக் கைத்தொழில், வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ப்பு நாடகம், கூத்து, ஆகிய துறைகளிலும், சதுரங்கம், கால்பந்தாட்டம், கிரிக்கெட் உள்ளிட்ட பல போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே பங்கேற்கமுடியும்.

போட்டிகளுக்கான மேலதிக விபரங்களை https://ullamm.com/2023reg/ என்ற இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். மார்ச் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# கிளி. கந்தபுரம் பாலத்தை புதிதாகப் புனரமையுங்கள்

## மாவட்டச் செயலரிடம் மனு



கிளிநொச்சி, பெப். 27
கிளிநொச்சி கந்தபுரம் பாலத்தைப் புதிதாக புனரமைக்குமாறு அக்கராயன் கிராம மக்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர். மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மேற்குக்கான போக்குவரத்துகள் கந்தபுரம் பாலம் வழியாகவே நடைபெறுகின்றன. அக்கராயன் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்காலின் கந்தபுரம் முச்சந்தியில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. பாலம் ஒடுங்கிக் காணப்படுவதன் காரணமாக பேருந்துகள் உட்பட கனரக வாகனங்கள் இலகுவாக திரும்பிச்செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் பாலத்தால் பல விபத்துக்கள் இடம்பெற்ற நிலையில் ஒடுங்கிக் காணப் படும் பாலத்தை கனரக வாகனங்கள் உள்ளிட்டவை பயணிக்கக் கூடிய வகையில் அமைத்து தருவதன் மூலம் கிளிநொச்சி மேற்குக்கான போக்குவரத்து பாதுகாப்பானதாக மாற்றப் படும். அத்துடன் அக்கராயன் குளத்தின் கீழ் வாழ்கின்ற விவசாயிகள் தமது உற்பத்திகளை இலகுவாக எடுத்துச்செல்லவும் முடியும். போக்குவரத்தும் பாதுகாப்பானதாக இருக்கும். நீண்ட காலமாக பாலத்தை அகலமாக அமைத்துத் தருமாறு கோரிக்கைகள் விடுத்தும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றுள்ளது. (ம-14,13)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்மாமன் வழியில் வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊர்ப்பாடசாலைகளின் ஊசலாட்டம்

'ஒரு பாடசாலையைத் திறக்கும்போது ஆயிரம் சிறைச் சாலைகள் மூடப்படுகின்றன' என்று சொல்வார்கள். வாழ்வின் நல்லது, கெட்டதைப் புரியவைத்து மனிதர்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்லும் கல்வியையும், அனுபவத்தையும் தருபவை பாடசாலைகளே. பாடசாலைகள் இடுகின்ற அடிப்படைதான் ஒவ்வொரு மனிதனினதும் வளர்ச்சியையும், அவனது வாழ்வியலையும் தீர்மானிக்கின்றன. அதனால் பாடசாலைகள் மூலமாக, வாழ்வின் அர்த்தத்தைப் புரியவைப்பதனூடாகக் குற்றங்களையும், குற்றவாளிகளையும் இல்லாமற் செய்துவிடலாம். இதனையே மேற்போந்த வாசகம் உணர்த்தி நிற்கின்றது. அதே வாசகம் தலைகீழாக மாறும்போது-ஒரு பாடசாலை மூடப்படும்போது-என்ன் நிகழும்? ஆயிரம் சிறைச்சாலைகள் திறக்கப்படும் நிலையே உருவாகும், சமூகம் தறிகெட்டுப் போய்விடும்.

துரதிர்ஷ்டவசமாக அண்மையில், யாழ்ப்பாணத்தில்-நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. வெறும் மூன்று மாணவர்கள் மாத்திரமே பாடசாலையில் பயில்வதால் வேறுவழியின்றி இந்த முடிவை எடுக்கவேண்டியிருந்ததாக கல்வித்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கல்வியறிவு வீதம் உயர்வடைந்து செல்லும் காலத்தில், இப்படி போதிய மாணவர்கள் இன்மையால் ஒரு பாடசாலை மூடுவிழாக் காணுவதென்பது ஆச்சரியம்தான். அதிலும் நகர்ப்புற ஆரம்பப் பாடசாலைகள் எல்லாம் கொள்ளளவை மீறிய மாணவர்களுடன் வீங்கிப் பெருத்து, விழிபிதுங்குகையில் ஒரு கிராமப் பாடசாலையின் வரலாறு மாணவர்கள் இன்மை என்ற ஒற்றைக்காரணத்தால் முற்றுப்பெறும் நிலைக்குச் செல்வதென்பது அதைவிட ஆச்சரியமே. நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைபோல இன்னும் சில பாடசாலைகளும் போதிய மாணவர்கள் இல்லாமல் இப்போதோ, அப்பாதோ என்று மூடுவிழாவை எதிர்நோக்கியபடியுள்ளன. அவையும் கிராமப் பகுதிப் பாடசாலைகள்தான். இப்படி கிராமத்துப் பாடசாலைகள் வெறிச்சோடிப்போக, நகரப் பாடசாலைகள் மட்டும் வகைதொகையற்ற மாணவர்களைக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமநிலைத் தளம்பலே கிராமப் பாடசாலைகள் பலவற்றினதும் மாணவர் எண்ணிகையின் வீழ்ச்சிக்கு பெரும் காரணம்.

என்னதான், 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட, அதையும் மீறி 'நகரப்பாடசாலைகளே நல்லபாடசாலைகள்' என்ற மாயை பரவலடையத் தொடங்கியிருக்கின்றது. ஆனாலும் நகரப்பாடசாலைகளுக்கு தாம் எந்தவகையிலும் கல்விப் போதனையிலோ, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலோ சளைத்தவையல்ல என்பதை கிராமப் பாடசாலைகள் அண்மைக்காலமாக நிரூபித்து வருகின்றன. நகரப்பகுதிகளில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில், ஓரிரண்டு பாடசாலைகளே புலமைப்பரிசில் பரீட்சையில் கவனிக்கத்தக்க பெறுபேறுகளை பெற்றிருந்தன. ஆனால், அந்தப் பெறுபேற்றுக்காக, குறிப்பிட்ட பாடசாலைகள் தமது மாணவர்களை 'புறொயிலர்' கோழிக்குஞ்சுகள் போல மாற்றி, பரீட்சைமையக் கல்வியை மட்டுமே புகட்டுவதுதான் உண்மை. ஆனால், கிராமப் பாடசாலைகள் அப்படியல்ல. ஒரு நகரப் பாடசாலையைவிடவும் கிராமப் பாடசாலைகளே ஒரு மாணவனின் தலைமைத்துவப் பண்பையும், கல்வி மட்டுமல்லாத பிற ஆற்றல்களையும் வெளிக்கொணர வைக்கின்றன. அதனை ஏனோ எம்மவர்கள் உணராமல், நகரப்பாடசாலைகள் என்ற மாயமானுக்காக ஓடுவதால், ஊரில் இருக்கும் பாடசாலைகளைக் கவனிப்பதில்லை.

ஊர்ப் பாடசாலைகள் என்பவை வெறுமனே கல்வியை மட்டும் ஊட்டும் கட்டடங்களல்ல. அவை ஒவ்வொரு ஊரினதும் பெருமையின் அடையாளம். கலாசாரத்தின் குறியீடு. எதிர்கால வழிகாட்டி. நினைவுகளின் பொக்கிஷம். அவை இப்படி ஒவ்வொன்றாக மூடப்பட்டால், ஒவ்வொரு ஊரும் தன் அடையாளத்தை, சுயத்தை இழக்கக்கூடும். 'குதிரைகள் ஓடிய பின்னர் லாயத்தைப் பூட்டுவது போல' பாடசாலைகள் மூடப்பட்ட பின்னர் அவற்றைத் திறப்பது பற்றி யோசிக்காமல், மூடப்படும் தறுவாயில் உள்ள பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு, குறிப்பிட்ட பாடசாலைகள் அமைந்துள்ள பகுதி மக்களிடத்தே உரிய விழிப்புணர்வை கல்வித்திணைக்களம் ஏற்படுத்தவேண்டும். ஊர்ப்பாடசாலைகளின் அருமையை அனைவரும் உணரும் வகையிலான செயற்பாடுகளை, அந்தந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் மூலமாக முன்னெடுத்தாலே அதிகளவான பாடசாலைகளில் மீண்டும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கமுடியும். ஊசலாடிக் கொண்டிருக்கும் ஊர்ப்பாடசாலைகளின் ஆயுளை இனியேனும் காப்பாற்றுவோமா?

**நாளொரு நல்வார்த்தை**

பயத்தை வெல்வதே மனிதனின் முதல் கடமை; அதைச் செய்யாத வரை அவனால் செயற்பட முடியாது. – தாமஸ் கார்லைல்




# மனிதநேயப் பணியில் தவறாது ஈடுபடுங்கள்

## அனைத்து அரச அலுவலர்களுக்கும் யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.27

அரச அலுவலர்கள் தமது அலுவலகப் பணிகளுக்கு அப்பால் பொது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளிலும் தம்மை அர்ப்பணிக்க முன்வரவேண்டும். நெருக்கடியான காலகட்டங்களில் சமூகப் பொறுப்புணர்ந்து பணியாற்றவேண்டும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**"யாழ்.மாவட்டத்தில் குருதிக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு மற்றவர்களிடம் கையேந்தவேண்டிய நிலை ஏற்படக்கூடாது. யாழ். மாவட்டத்திலுள்ள அரச பணியாளர்கள் குருதிக்கொடை செய்ய முன்வரவேண்டும்."**

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால் அரச அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச அலுவலர்கள் மக்களுக்கு நேர்மையாக - மனிதாபிமான முறையில் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு சமூகப்பொறுப்புணர்ந்து பணியாற்றுவதானது நெருக்கடியான காலகட்டங்களை கடக்க வழிவகுப்பதுடன், அந்தப் பணிகள் மூலமாக மக்கள் மனங்களில் இடம்பிடிக்கவும் முடியும். அரச அலுவலர்கள் அலுவலகங்களில் வீண்பொழுது போக்குகின்றனர் என்ற எண்ணமே மக்களிடம் உள்ளது. அந்த எண்ணத்தை மக்கள் மனங்களிலிருந்து நீக்கவேண்டும். அலுவலகத்துக்கு வருகின்ற வயோதிபர்கள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். அனைத்து துறைசார்ந்த அரச அலுவலர்களும் தமது பணியுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் குருதிக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு மற்றவர்களிடம் கையேந்தவேண்டிய நிலை ஏற்படக்கூடாது. யாழ். மாவட்டத்திலுள்ள அரச பணியாளர்கள் குருதிக்கொடை செய்ய முன்வரவேண்டும். 'மக்கள் சேவை மகேசன் சேவை' என வாய்வழியாகக் கூறிவிட்டு இருக்காமல் அதை செயலில் காட்டவேண்டும் - என்றார்.

இந்தச் செயலமர்வில் யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள், வளவாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

(ச-125)

**நாளை**

**28.02.2023**
**செவ்வாய்க்கிழமை**
**மாசி 16**

சுபநேரம் : 10.58 - 12.28
ராகுகாலம் : 03.28 - 04.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடையின் பிற்பாடு சிறுதானியச் செய்கை

## விவசாயிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.27

காலபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர் அந்தந்த வயல்களில் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெரும்போக அறுவடைப் பணிகளில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் 90 வீதமான வயல்களில் பெரும்போகத்துக்கான நெல் அறுவடை நிறைவு பெற்றுள்ளது. அதன்காரணமாக கூடுதலான வயல்கள் ஈரப்பதமாக காணப்படுவதால் அந்த வயல்களை சீர்படுத்தி உளுந்து, கௌபி, பயறு, எள்ளு போன்ற தானியங்களை விதைத்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மாவட்ட விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-17)

# முல்லையில் இன்று மழைக்கு சாத்தியம்!

யாழ்ப்பாணம், பெப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழைக்குச் சாத்தியம் உள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் உள்ளதாவது:-

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# உ.கிழங்குச் செய்கை விளைச்சல் அமோகம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் எதிர்பார்த்ததைவிட அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளது என விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பரவலாக விவசாயிகள் உள்ளூர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் அறுவடைப்பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அறுவடையில் எதிர்பார்த்ததை விட அதிக விளைச்சல் ஈட்டப்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் விவசாய போதனாசிரியர் பிரிவில் அச்சுவேலி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு செய்கைக்கான அறுவடை விழா நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

# பெரும்போகச் செய்கைக்கு விதைநெல் கொள்வனவு!

## யாழ். விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 27

இந்த ஆண்டின் பெரும்போக நெற்செய்கைக்காக விதைநெல் கொள்வனவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 7 ஆயிரம் புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டு நெற்செய்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விதை நெல் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

கடந்த காலபோகத்தின்போது சீரற்ற காலநிலை காரணமாக கூடுதலான வயல்களில் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டதுடன் நெற்கதிர்களும் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்தன. அதன்காரணமாக இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக நெற்செய்கையின்போது விதை நெல்லுக்கு பற்றாக்குறை நிலவலாம். அதற்கமைய செய்கையாளர்கள் நலன்கருதி இம்முறை கூடுதலாக விதை நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என விவசாயத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-17)

# அடுத்த போகத்துக்கு உரம் இறக்குமதி!

கொழும்பு, பெப். 27

எதிர்வரும் பருவத்துக்கான உரத்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தேசிய உரச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் பணிப்பாளர் சந்தன முத்துஹேவகே தெரிவித்ததாவது:

உலக விவசாய நிறுவனத்துடன் தொடர்புகொண்டு உர இறக்குமதிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கலப்பு உரங்கள் மற்றும் யூரியா உரவகைகள் இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ளன. மரக்கறிச்செய்கை, பழச்செய்கை மற்றும் நெற்செய்கை மற்றும் ஊடுபயிர்கள் போன்றவற்றுக்கு இந்த உரங்களைப் பயன்படுத்த முடியும். இதேவேளை கடந்த பருவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உரம் இன்னமும் இருப்பில் உள்ளது - என்றார். (ச-இ)

# மன்னார் மாவட்டத்தில் தவக்காலத் தியானம்

மன்னார், பெப். 27

கத்தோலிக்க மக்களால் கடைப்பிடிக்கப்படும் தவக்காலத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரை தவக்காலத் தியானம் இடம்பெறவுள்ளது.

தமிழ்நாடு புதுவாழ்வு மையத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜெயக்குமார் தலைமையில் இந்தத் தியானம் நெறிப்படுத்தப்படவுள்ளது.


இதற்கமைய மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம், எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிதொடக்கம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிவரை மடுமாதா திருத்தலத்தில் அமைந்துள்ள புனித யோண் மரியவியான்னி தியான இல்லத்தில் நடைபெறும்.

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள அனைத்துத் தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளருக்குமான தவக்காலத் தியானம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் நடைபெறும்.

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிதொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி வரை மடுமாதா திருத்தல மரிய வியான்னி தியான இல்லத்தில் தியானம் நடைபெறும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-60)

# வீட்டுக்குள் நுழைந்தது காட்டுவிலங்கு அழுங்கு

முல்லைத்தீவு, பெப். 27



கொக்கிளாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் சென்ற அரியவகை காட்டு விலங்கினமான அழுங்கு (ஆர்மெடில்லா) பொலிஸாரால் மீட்கப்பட்டது.

வீட்டுக்குள் அழுங்கு சென்றதை அடுத்து வீட்டின் உரிமையாளர்கள், கொக்கிளாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

தகவலை யடுத்து வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அழுங்கை மீட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அதை வன உயிரிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-14,19)

# மயந்த பதவிவிலக திட்டம்

கொழும்பு, பெப். 27

நாடாளுமன்ற நிதிக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் மயந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அறிவித்துள்ளார். (ம-14,இ)

# அரச காணியில் பணம் மோசடி பெரமுனவின் உறுப்பினர் கைது!

கொழும்பு, பெப். 27


புத்தளம் மஹகும்புக்கடவல, பிரதேசத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை விற்பனை செய்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், பொதுஜன பெரமுனவின் ஆனமடுவ உள்ளூராட்சிசபையின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான 200 ஏக்கர் காணியை வெளிநாட்டவருக்கு குத்தகைக்கு வழங்கி 24 மில்லியன் ரூபாவை மோசடி செய்துள்ளார். வர்த்தகக் குற்றப் புலனாய்வுப் பொலிஸ் குழுவால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 - 06 - 1939



மறைவு
10 - 03 - 2022

கடந்த 10.03.2022 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் மயில்வாகனம் சந்திரசிங்கம்

**திதி : அஸ்டமி [27.02.2023]**

*ஆண்டொன்று ஓடி மறைந்ததே*
*ஆயினும் உம் நினைவுகள் எம்மை*
*விட்டு அழிவதில்லை அப்பா.*
*ஏர் பிடித்து ஏணியாய் நின்றீரே அப்பா*
*அதில் ஏறி நாம் சிகரமும் தொட்டோமே அப்பா*
*அன்று மண்ணுலகம் போற்ற வாழ்த்தீரே அப்பா*
*இன்று விண்ணுலகம் போற்ற வாழ்கிறீரே அப்பா*

அன்னாரின் முதலாம் ஆண்டு திவச நிகழ்வுகள் இன்று (27.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவபூதராயர் வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

(CS 23729) (3/6)

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 08 . 1948



மறைவு
26 . 02 . 2023

## திருமதி சின்னத்தம்பி அரியமலர்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி அரியமலர் நேற்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும், அமரர் அருளம்மா, அமரர் பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற கிராமசேவகர்), முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் பரமலிங்கம் (நில அளவையாளர்), தவமலர், துரைசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), தனபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவாஜினி (சுவிஸ்), சிவயோகினி (சுவிஸ்), சிவந்தினி (சுவிஸ்), சிவகரனி (ஆசிரியர்-வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மபாலா, ஜெயந்தன், உதயகுமார், தர்சனன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-வலி மேற்கு, சங்கானை) ஆகியோரது பாசமிகு மாமியும், சுஜிபனா (சுவிஸ்), பர்னிதா (சுவிஸ்), சன்விகா (சுவிஸ்), வினோஜன் (சுவிஸ்), மேருக்சன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**070 6086 483 - க.தர்சனன்**

(CS 23731) 1-6

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நடராசா



சிறுப்பிட்டி பூங்கொத்தையை பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராசா நேற்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தவமணி, ஆனந்தகுமார், பராசக்தி மற்றும் புவனேஸ்வரி, லோகேஸ்வரி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் தவமணி, நவரத்தினம், பரமேஸ்வரி, தவராசா ஆகியோரின் மைத்துனரும், பாரதி (கனடா), பகீரதி (லண்டன்), தர்சினி, பிரபாலினி, கோபிராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், எழிலன், கோபிநாத், நிசாந்தன், உமைபாலன், துசானா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாவரசி, நிகரன், திகழரன், சாயிரா, சாய்னா, சாயிராம், பவிரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**கோபி (மகன்) - 41763282431**
**உமைபாலன் (மருமகன்) - 077 9916 589**
**நிசாந்தன் (மருமகன்) - 077 9866 684**

(CS 23732)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா விவரங்களை அறிய 7 மொழிகளில் புதிய செயலி!

சுற்றுலா விவரங்களை அறிய 7 மொழி களைக் கொண்ட புதிய செயலி அறிமுகப் படுத்தப்படவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முச்சக்கரவண்டிகளைப் பதிவு செய்வதற்கும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான, 'பார்' குறியீடுகளை ஸ்கான் செய்வதற்கும் இந்த செயலி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் பொலிஸார் செயலியை கண்காணிப்பதன் மூலம் நடவடிக்கை எடுப்பார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-14,இ)

## தேவை

காணி நிரப்புவதற்கு மண் (ஊத்த மண்) தேவை.
தவம் : 076 159 6912
(CS 23698)(3/6)

## வேலையாட்கள் தேவை

வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் (பெண்கள்) விற்பனையாளர் தேவை. வயது எல்லை (20 - 30) மானிப்பாயை அண்டிய பிரதேசம் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள திங்கள் முதல் சனி வரை
முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை
தொடர்பு கொள்ளவும்: 075 632 8578
(CS 23662)(3/6)

**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!**
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**யாழ் கலாலயா பயிற்சியகம்**
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா
## பெறுகை அறிவித்தல்கள் - 2023

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் 2023 ஆம் ஆண்டிற்குரிய கழிவ கற்றும் பைகள் கொள்வனவு செய்தல், மருந்து உறைகள் கொள்வனவு செய்தல் மற்றும் அழுக்குத்துணிகளை சலவை செய்தல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | கேள்வி இல | விலை மனுப்பிணைத் தொகை |
|---|---|---|---|
| 01. | கழிவு சேகரிக்கும் பைகள் (Garbage Bags) கொள்வனவு செய்தல் - 2023 | NP/04/43/DGHV /03/ NCB/LP/GB/2023/02 | 25,000.00 |
| 02. | மருந்து உறைகள் (Drug Envelops) கொள்வனவு செய்தல் - 2023 | NP/04/43/DGHV /03/ NCB/LP/DE/2023/03 | 25,000.00 |
| 03. | அழுக்குத்துணிகளை சலவை செய்தல் சேவை - 2023 | NP/04/43/DGHV /03/ NCB/LP/LS/2023/04 | 25,000.00 |

01. மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக பெறுகை விண்ணப்பங்களுக்கு ரூபா 2,000.00 இனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்திப் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். (நிறுவன கடிதத்தலைப்பில் கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்)
02. பெறுகை விண்ணப்பம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்.
03. பெறுகை ஆவணங்களை 27.02.2023 தொடக்கம் 13.03.2023 ம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
04. பெறுகை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது 13.06.2023 ம் திகதி வரை செல்லுபடியாகக்கூடிய வகையில் ரூபா 25,000.00 பெறுமதியில் விலை மனுப்பிணையினை (Bid Security Bond) அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றினூடாகப்பெற்று கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. சகல பெறுகை ஆவணங்களும் **"பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, கண்டி வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் (நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலமாக) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய சேவைகளை குறிப்பிடல் வேண்டும்.
    * கழிவு சேகரிக்கும் பைகள் கொள்வனவு செய்தல் - 2023
    * மருந்து உறைகள் கொள்வனவு செய்தல் - 2023
    * அழுக்குத்துணிகளை சலவை செய்தல் சேவை - 2023
06. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 14.03.2023ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
07. பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் 14.03.2023ம் திகதி காலை 11.00 மணிக்கு பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரம் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.
09. பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.

Dr. J.M. நிலக்சுஷன்,
தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
வவுனியா.
024-2228094, Fax: 024-2222262, Email :acctghv@gmail.com
(393312)(2.6)

## Jaffna International Trade Fair
## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

13 EDITION
JITF
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2023
www.jitf.lk
jitf.lk



MAIN SPONSOR: TOKYO CEMENT GROUP
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY
OFFICIAL PARTNERS: உதயன், NorthernUNI, AROMA, SUN

ஸ்டால்களுக்கான முன்பதிவு
**RESERVATION FOR STALLS**
Imalka: +94 71 7488107, +94 77 1093792 | imalka@saexhibitions.com

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை அம்பிகாதேவி (தேவி)

(ஓய்வுபெற்ற இலிகிதர், பனை அபிவிருத்திச் சபை)

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அம்பிகாதேவி அவர்கள் நேற்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கதிரமலை தம்பதியனரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி (குஞ்சா), விமலாதேவி (கிச்சி), காலஞ்சென்ற வியாகேசன் (பிள்ளையார்) மற்றும் ரவிதேவி (வெள்ளையம்மா) காலஞ்சென்ற காங்கேயன் (சின்னாம்பி), குகதாசன் (ரவி) மற்றும் பிரமிளாதேவி (பிள்ளை - லண்டன்), ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்துரை, பாலசுப்பிரமணியம் (சின்ராசு), ரதி, நித்தியானந்தம் (சின்னாம்பி), தயானந்தி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தேவகி (தேவா), துவாரகை (துவா) காலஞ்சென்ற ஜீவகி (ஜீவா), கிருஷ்ணகுமார், மற்றும் சியாமளா (ராதா), தர்ஜினி (தர்ஷா - ப.அ.சபை - M.A) கிருஸ்ணாகாந்தன் (கிருஸ்ணா - பிரான்ஸ்), சாந்தகுமார் அன்பினி (MPCS - Jaffna) ஆகியோரின் பெரிய தாயாரும், காயத்திரி (பிரான்ஸ்), விஸ்ணுகாந்தன் (லண்டன்), கோபிகாந்தன் (கட்டார்), மிருஷன் (அமெரிக்கா), சுலக்ஷன், தனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரம்ஜவர்ஜினி (சதுர்த்தி) அவர்களின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளானை வைரவர் கோவிலடி,
கிளானை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.
(CS 23727)(3/6)

தகவல் :
குடும்பத்தினர்
076 791 2370, 076 538 9558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தத்துக்கு இனி பஞ்சமில்லை

# தொலைதூர காதலருக்கு முத்தம் பரிமாற சாதனம்

## சீனா அசத்தல்

பீஜிங், பெப். 27

தொலைதூரங்களில் இருந்து காதலர்கள் தங்கள் எது முத்தத்தை பரிமாறிக் கொள்வதற்கான புதிய சாதனம் ஒன்றை சீனாவைச் சேர்ந்த ஒருவர் வடிவமைத்துள்ளார்.

சீனாவிலுள்ள சாங்கோ தொழிற்கல்வி நிறுவனம் இந்தப் புதிய சாதனத்தை வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய கண்டுபிடிப்பான 'ரிமோட் கிஸ் சாதனம்' ஒரு ஜோடி சிலிக்கன் உதடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதிலுள்ள அழுத்த உணரிகள் மற்றும் சிறிய மோட்டர்கள் ஆகியவை காதலர்களின் முத்தத்தின் அழுத்தம், இயக்கம் மற்றும் வெப்பநிலை ஆகியவற்றின் ஸ்பரிசத்தை உறுதிப்படுத்தும்.

இந்தச் சாதனத்தை பயனர்கள் தொலைபேசியுடன் புளூடூத் மூலமாக இணைப்பதன் மூலம் உலகத்தின் மறுபக்கத்தில் உள்ள மற்றைய இணையரை இணைத்துக்கொள்ளும்.

இதற்கான செயலியை பதிவிறக்கம் செய்து, இந்தச் சாதனத்தை தொலைபேசியுடன் இணைத்து இதில் உள்ள சிலிக்கன் உதடுகளில் முத்தமிட்டால் உண்மையான முத்தத்தை இணையருக்கு வழங்கமுடியும் என சாதனத்தை வடிவமைத்தவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# உண்மையாகும் சோம்பி வைரஸ்

## அதிர்ச்சியில் அமெரிக்கா



**வொஷிங்டன், பெப். 27 அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரத்துக்கு அடுத்து போதைப்பொருள் பயன்பாடு அரசுக்கு பெரிய தலைவலியாக மாறியுள்ளது. அந்த வகையில் இப்போது சோம்பி என்ற போதைப்பொருளின் தாக்கம் அங்கு அதிகரித்துள்ளது.**

சோம்பி போதைப்பொருள் அமெரிக்காவில் பிரபலமாகி வேகமாகப் பரவிவருகிறது. ஹெரேய்னுக்குப் பதிலாகவே முதலில் இதைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதன் பின்னரே இதன் பயன்பாடு அதிகரித்துள்ளது. ட்ரங் டோப் எனப்படும் இந்தப் போதைப்பொருளைப் பயன்படுத்தினால் மிக மோசமான பக்க விளைவுகள் ஏற்படுகிறது.

இதை எடுத்துக்கொண்டால் மயக்க மருந்தை எடுத்துக்கொண்டது போல இருக்கும். தீவிர தூக்கம், மனஅழுத்தம், மூச்சுவிடுவதில் சிரமம் மற்றும் கை, கால்களில் மோசமான புண்கள் ஏற்படும். அதனை அப்படியே கவனிக்காமல் விட்டால் தோல் முழுவதும் பாதிப்படைந்து அழுகிவிடும்.

இந்தப் போதைப்பொருளைப் பயன்படுத்தியதும் உச்சகட்ட போதை அடைவதால், அதனைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. போதை தலைக்கேறினால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்றெல்லாம் நினைவில் இருக்காது. சோம்பிகள் போல சாலைகளில் ஒருசிலர் சுற்றித்திரிந்த நிலையில் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையிலேயே அந்த இளைஞர்கள் இந்தப் போதைப் பொருளைப் பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

# மோடியின் ஆட்சி சிறந்தது

## பாக். இளைஞர் தெரிவிப்பு

லாகூர், பெப். 27

பாகிஸ்தான் பிரதமருடன் ஒப்பிடும்போது நரேந்திர மோடியின் ஆட்சி சிறந்தது.

அவர் பாகிஸ்தானுக்கும் கிடைத்திருந்தால் அனைத்துப் பிரச்சினைகளையும் கையாண்டிருப்பார் என பாகிஸ்தானைச் சேர்ந்த இஸ்லாமியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறி வருகிறது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானை பிரிக்காமல் இருந்திருக்கலாம். அத்தியாவசியப் பொருள்களை நேர்மையான விலைக்கு வாங்கி எங்கள் குழந்தைகளுக்கு கொடுத்திருப்போம்.

பாகிஸ்தான் பிரதமருடன் ஒப்பிடும்போது நரேந்திர மோடியின் ஆட்சி சிறந்தது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# உக்ரைனுக்கு போர் விமானம்

## வழங்குகின்றது டென்மார்க்

கீவ், பெப். 27

ரஷ்யாவிடம் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக உக்ரைனுக்கு அதிநவீன போர் விமானங்களை வழங்க டென்மார்க் முடிவெடுத்துள்ளது.

உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை அள்ளிக் குவித்துவரும் அமெரிக்காவே இன்னமும் போர் விமானங்களைத் தனது ஆயுத உதவிப் பட்டியலில் சேர்க்காத நிலையில், டென்மார்க் இந்தப் பரபரப்பு அறிவிப்பை விடுத்துள்ளது.

'எப்-16' என்று அறியப்படும் அதிநவீன போர் விமானங்களையே இவ்வாறு உக்ரைனுக்கு டென்மார்க் வழங்கவுள்ளது. (ம)

# சீனாவின் உளவு பலூன் 'செல்பி'

## வெளியிட்டது பென்டகன்



வொஷிங்டன், பெப். 27

60 ஆயிரம் அடி உயரத்தில் எடுக்கப்பட்ட சீன உளவு பலூனின் 'செல்பி' ஒளிப்படத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ தளங்களைக் கண்காணிக்க சீன உளவு பலூன் பறக்க விடப்பட்டமையானது உலக அரங்கில் அண்மைக்காலமாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த உளவு பலூனை அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அட்லாண்டிக் பெருங்கடலில் சுட்டுவீழ்த்தியது.

சுட்டு வீழ்த்துவதற்கு முன்பதாக 60 ஆயிரம் அடி உயரத்தில் அதனைக் கண்காணித்த அமெரிக்காவின் போர் விமானமான 'எப்-2 ராப்டர்' எடுத்த 'செல்பி' யை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டுள்ளது. சீன உளவு பலூன் மர்மமான வெள்ளைக் கோளத்தில் தொங்குவதையும் தாக்குதல் தொடுத்த அமெரிக்க [illegible] குறிப்பிடத்தக்க கா[illegible] காட்டுகிறது. (ச-இ)

# 3000 ஆண்டுகளுக்கு முன்பே மூளைச் சத்திர சிகிச்சை



ஜெருசலேம், பெப். 27

இஸ்ரேலில் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூளையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை இஸ்ரேல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இஸ்ரேலின் பண்டைய நகரமான டெல் மெகிடோவிலுள்ள கல்லறை ஒன்றின் அகழ்வாராய்ச்சியின்போது இரண்டு சகோதரர்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதில் ஒரு நபரின் மண்டை ஓடு, அதன் கீழ் இருக்கும் திசுக்கள் சேதமடையாமல் உடைத்தெடுக்கப்பட்டிருப்பதை ஆய்வுகள் உறுதி செய்திருக்கின்றன. இந்தச் சகோதரர்கள் கி.மு. 1550 முதல் கி.மு. 1450 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதில் மூத்த சகோதரர் 20 முதல் 40 வயதுக்குட்பட்டவராக இருக்கலாம் எனவும் அவரது மண்டை ஓட்டில் மூளை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமைக்கான தடயமே அதுவென ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

அதாவது மண்டை ஓட்டில் ஒரு சதுரமான எலும்புப் பகுதி கூர்மையான ஆயுதமொன்றால் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூளைச் சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளமை உறுதியாகியுள்ளது என விஞ்ஞானிகள் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் அந்த நூற்றாண்டில் நிலவிய மருத்துவம் மற்றும் கலாசாரம் குறித்தும் அறிய முடிகிறது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பேரெழுச்சியை ரணிலால் முடக்கமுடியாது

*அநுரகுமார ஆவேசப் பேச்சு*

கொழும்பு, பெப். 27

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதன் மூலம் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியை - ஒட்டு மொத்த நாட்டு மக்களின் எழுச்சியை - கட்டுப்படுத்த லாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நினைக்கக்கூடாது. இந்த அரசால் எங்களை அடக்கிவிடவே முடியாது - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

'தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அநுரகுமார உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக உரிமையான வாக்குரிமையை மக்களிடமிருந்து ரணில் விக்கிரமசிங்க பறித்தெடுத்துள்ளார். நாட்டில் வாழும் அனைத்து மக்கள் முன்னிலையிலும் அவர் இன்று செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எமக்கு வடக்கா, கிழக்கா, தெற்கா, மேற்கா என்று எவ்விதப் பிரச்சினையும் இல்லை. எவ்வித பேதமும் இன்றி மக்கள் முன்னிலையில் எம்மால் செல்ல முடியும். மக்களை ஒன்றுதிரட்டவும் எம்மால் முடியும். ரணில் அரசால் இதைச் செய்ய முடியுமா?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 8 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தக் காலப் பகுதியில் நூறு மக்களையாவது திரட்டி ஏதாவது ஒரு கூட்டத்தை அவர் நடத்தினரா?

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று நாட்டின் அனைத்துப் பகுதிகளும் தடை செய்யப்பட்ட பூமியாகிவிட்டன. நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரால் முடியாது - என்றார். (அ-ஓ-22)

## இந்திய மீனவர்களுக்கு...

சீலனை செய்யுமாறு கோரியுள்ள அவர்கள், இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று ஒன்று கூடிப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சின் முடிவிலேயே ஜனாதிபதியை சந்திப்பதற்கான கடிதம் ஒன்று வரையப்பட்டது.

அந்தக் கடிதத்தில்,

கடந்த பல வருடங்களாக இலங்கை கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாகத் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பாக வடக்கு கடற்றொழில் சமூகம் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளது. நல்லாட்சிக்காலத்தில் நீங்கள் (ரணில் விக்கிரமசிங்க) பிரதமராகப் பதவி வகித்தபோது 2016 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சு மட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி முன்கொண்டு சென்று நிரந்தரத் தீர்வை வழங்குவீர்கள் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர், இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடல் எல்லைக்குள் அனுமதி வழங்குவது தொடர்பாக கருத்து தெரிவித்து இருந்தார். இது வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய இழுவைப் படகுகளால் எங்களுடைய கடல் வளமும், வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு பல கோடி ரூபா சொத்துக்களும் இழக்கப்பட்டுள்ளன. எமது கடல் பகுதிக்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பது தொடர்பாக தங்களுடன் நேரில் சந்தித்து கலந்துரையாட ஆவலாக உள்ளோம். இலங்கையின் இறைமைக்குட்பட்ட கடற்பகுதியில் வெளிநாட்டு கடற்றொழிலாளர்களை அனுமதிப்பதை மீள்பரிசீலனை செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஓ-5)

# பிரதமர் பதவியிலிருந்தே நான் விலகியிருக்கக்கூடாது

## மஹிந்தவுக்கு வந்த ஞானோதயம்



பிரதமர் பதவியை மீளப் பொறுப்பேற்க வுள்ளேன் என்று வெளிவரும் செய்தி தொடர்பில் கருத்துக்கூறநான் விரும்பவில்லை. நான் பிரதமர் பதவியிலிருந்து விலகியதே தவறு - இவ்வாறு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமராக மஹிந்தவை மீளவும் நியமிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

'கடந்த வருடம் மே 9 ஆம் திகதி நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டே பிரதமர் பதவியிலிருந்து விலகினேன். அந்தக் கசப்பான சம்பவத்தை மீள நினைவுபடுத்த நான் விரும்பவில்லை. மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும் ஆசை எனக்கு இல்லை. எனினும், நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் அந்த நேரம் தீர்க்கமான முடிவு எடுப்பேன்' - என்றார். (அ-ஓ-22)

# 13 ஐ நான் எதிர்க்கவில்லை!

## ஆனால் இப்போதைக்கு அதைப்பற்றி பேசமாட்டேன் என்கிறார் மஹிந்த

அரசமைப்பின் '13'ஆவது திருத்தச் சட்டத்தை நான் எதிர்க்கவில்லை. '13'ஐ விட '13' பிளஸ் வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. ஆனால், நாட்டின் தற்போதைய நிலைமையில் '13' தொடர்பில் பேசுவதை நிறுத்த வேண்டும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த வெள்ளிக்கிழமை கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ச, 13ஆம் திருத்தச்சட்டம்தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தார். நீங்கள் கடந்த காலங்களில் 13 பிளஸ் எனத் தெரிவித்துவிட்டு இப்போது அது தேவையில்லை என்று குறிப்பிடுவதற்கான காரணம் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் மஹிந்தவிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'எரிகின்ற வீட்டில் பெற்றோல் ஊற்ற நான் விரும்பவில்லை. 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு எதிராக தேரர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். இந்நிலையில், 13 ஐ ஆதரிக்கும் கருத்தை நான் தற்போது வெளியிட்டு நிலைமையை மோசமாக்க விரும்பவில்லை. அதற்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் எதிர்ப்பு என்று அர்த்தமல்ல. 13ஐ விட 13 பிளஸ் வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும். தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கவேண்டும். இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை' - என்றார். (அ-ஓ-5.22)

# பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை!

## தினேஷ் அறிவிப்பு



கொழும்பு, பெப். 27

நான் பிரதமர் பதவியிலிருந்து பதவி விலகப்போவதாக வெளியான செய்திகளும் அறிக்கைகளும் முற்றிலும் பொய்யானவை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை குழப்பும் வகையில் இவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதமர் பதவி தொடர்பில் அவ்வாறான யோசனையோ அல்லது கலந்துரையாடலோ இது வரையிலும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)


மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



Best Wishes
Congratulations

ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் சிவநேசராசன்
SLTS - 1 (BSc Chem, PGDE, Dip. in Tech. English)

சேவைக்காலம்

- யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி - 11.01.1993 - 17.07.1997
- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி - 18.07.1997 - 08.03.1999
- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - 09.03.1999 - 11.10.2012
- யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி - 12.10.2012 - 12.06.2014
- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி - 13.06.2014 - 27.02.2023

எமது பாடசாலையில் அளப்பெரும் சேவையாற்றி 27.02.2023 திங்கட்கிழமை ஓய்வுபெறும் திரு. சுப்பிரமணியம் சிவநேசராசன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் கழகம்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

cs 49249(2.6)

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.09.1963
இறப்பு 23.02.2023

எமது வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் சமூக சேவைக்கு நீண்ட பல காலமாக குடும்பமாக உதவி புரிந்து வரும் கொக்குவிலைச் சேர்ந்த அமரர் சேவியார் சிவானந்தன் அவர்களின் மூத்த புதல்வன்

சிவானந்தன் ரவிசங்கர்

அவர்கள் 23.02.2023 நோர்வேயில் காலமாகிவிட்டார். அவரிற்கு எமது கழகம் சார்பில் கண்ணீர் அஞ்சலியினை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பேதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக்கழகமும்
சனசமூக நிலையமும்
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு...

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வடக்கு கடற்பகுதியில் அனுமதி பெற்று இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கலாம் என்று தெரிவித்த கருத்துக்கு வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இதனால் இரண்டு நாடுகளின் நட்புறவில் பாதிப்பும் ஏற்படக்கூடும். எனவே, இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு விரைந்து நிரந்தரத்தீர்வு காணவேண்டும். இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு வடக்கிலும், தமிழகத்திலும் பலர் அரசியல் ஆதாயமும் தேடுகின்றனர். மீனவர்களின் வாழ்வில் எவரும் விளையாடக்கூடாது. நீங்கள் என்னிடம் கேட்ட விடயம் பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பில் அமைச்சரவை முடிவு எடுக்கும். அதனை நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். வடக்கு மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு அந்தத் தீர்மானம் அமையும்' - என்றார் ரணில். (அ-ஒ-5-22)

## பேருந்து...

வவுனியா தவசிக்குளத்தைச் சேர்ந்த ஏ.கனகராஜா (வயது - 40) என்பவரே பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

துவிச்சக்கர வண்டியில் கனகராஜா பயணித்துக் கொண்டிருந்தபோது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து, அவரின் பின்பக்கமாக மோதியதிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த கனகராஜா வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்தும் தனியார் பேருந்தும் போட்டி போட்டுக்கொண்டு ஓடியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-110)

## இந்திய மீனவர்களை...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்தியத் தரப்புக்களுடன் பலமுறை பேசியுள்ளோம். எமது பசிக்கு உதவும் வகையில் செயற்படும் அதேநேரம் அதனைப் பிடுங்கவும் முற்படுகின்றனர். உதவிக்கு நன்றி கூறும் நாம் அத்துமீறலையும் கண்டிக்கின்றோம். இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கினால் இழப்பு வடக்கு மீனவர்களுக்கே ஏற்படும். இதுவரை ஏற்பட்ட இழப்புக்கே உரிய நிவாரணம் இல்லாதபோது இந்திய மீனவர்களை அனுமதிக்கும் திட்டம் யாருடைய நலனுக்கானது?

இந்திய மீனவர்களை வடக்குக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதன் ஊடாக பெறப்படும் பணம் வடக்குக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று கூறப்படுவதை ஒருபோதும் நம்பமுடியாது. ஏனெனில் இதுவரை எதுவுமே அப்படிப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்தியாவால் வழங்கப்பட்ட அரிசி மட்டுமே எமக்கு கிடைத்தது. இந்த அரசாங்கமும், அமைச்சரும் தமது பொக்கெற்றை நிரப்புவதற்கே முயற்சிக்கின்றனர்.

இதனால் இலங்கையின் கடலை மட்டுமல்ல தரையையும் இழக்கும் சூழலே ஏற்படும். தற்போது இலங்கையில் மலேரியா இல்லை. இந்தியாவுக்கு வழங்கும் அனுமதி மூலம் மீண்டும் மலேரியா பரவும். இதேநேரம் இனி வரும் காலத்தில் தமிழக மீனவர்களுடன் பேசி இதற்குத் தீர்வு எட்டவேமுடியாது. கச்சதீவில் பேச்சு என்பது கடற்றொழில் அமைச்சரின் மாயாஜாலம் என்றே நம்புகின்றோம். இந்திய மத்திய அரசு அல்லது தமிழக அரசுடன் மட்டுமே இனிப் பேசவேண்டும். அதனால் கச்சதீவுப் பேச்சையும் நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம் - என்றார். (அ-ஒ-5)

## ரணிலுக்கு....

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தை அரச படைகள் மூர்க்கமாக ஒடுக்கின. இதனால் 28 பேர் வரையில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் அலையெனத் திரண்டு பங்கேற்றனர். ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு தாமரைத் தடாகம் முதல் நகர மண்டபம் வரையான வீதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து இப்பன்வல சந்திக்கருகில் வைத்து ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போதே பலரும் காயமடைந்தனர்.

இதேவேளை- தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அந்தக்கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 26 பேருக்கு கொழும்பு மருத்துவமனை சதுக்க வலயத்துக்குள் பிரவேசிக்க, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

அதன்படி, தேசிய மருத்துவமனை, கண் வைத்திய சாலை, இருதய மருத்துவமனை மற்றும் மருதானை பிரதான மருத்துவ்மனை சதுக்கங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய வகையில் போராட்டக்காரர்கள் அருகில் உள்ள பகுதிகளுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து டீன்ஸ் வீதி, சீமன்ஸ் வீதி சந்தி வரையிலான வீதி மற்றும் நடைபாதைகளை மறித்து பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தடை உத்தரவு பெறப்பட்டிருந்தபோதிலும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (அ-ஒ-22)

## இந்தியர்களுக்கு...

இழுவைமடிப் படகுகளில் வந்தே வடக்கு கடற்பரப்பில் மீன்பிடிப்பார்கள் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அனுமதிபெற்று மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் நாடாளுமன்றில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்திலும் சிலர் இழுவைமடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். இங்கு செய்தாலும் சரி, எங்கு செய்தாலும் சரி அது இல்லாதொழிக்கப்படவேண்டும். இழுவைமடித் தொழிலை தடைசெய்யும் சட்டத்தை தனிநபர் சட்டவரைவாக நான் சமர்ப்பித்திருந்தேன். அது நல்லாட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனைப் பிரயோகிக்கவில்லை. அதற்காக இழுவைமடித் தொழிலில் ஈடுபடுவதை ஏற்கமுடியாது.

தமிழக - வடக்கு மீனவர்கள் சிறிய நீர் நிலையால் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இரு தரப்பினரும் நாட்டுப் படகில் மீன்பிடிக்கும்போது எல்லை தாண்டுவது சகஜமான விடயம். எனவே இந்தப் பிரச்சினையை வித்தியாசமான கோணத்தில்தான் அணுகவேண்டும்.

அனுமதிபெற்று மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படுமாக இருந்தால் இந்திய மீனவர்கள் இழுவைமடியிலேயே வந்து மீன்பிடிப்பார்கள் - என்றார். (அ-ஒ-5)

## அரசியல்...

பெயரில் அரசியல் கலந்துரையாடல்கள் நடைபெறுவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் இடமளிக்கக்கூடாது என்று வடக்கு மீனவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடற்பரப்பில் அனுமதிபெற்று மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஆராயும் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்படி கோரிக்கையையும் வடக்கு மீனவர்கள் முன்வைத்துள்ளனர்.

இம்முறை கச்சதீவு திருவிழாவின்போது வடக்கு மீனவர்களுடன் தொடர்பில்லாத சிலரை அழைத்துச் சென்று, இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும், அரசியல் ரீதியிலான நகர்வுகளுக்காகவே இவ்வாறு செய்யப்படுவதாகவும் வடக்கு மீனவர்கள் நேற்றுக் குறிப்பிட்டனர். எனவே, கச்சதீவில் மதம் சார்ந்த நிகழ்வுகள் தவிர்ந்த ஏனையவற்றை அனுமதிக்கக்கூடாது என்று யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆயர்களை அவர்கள் கோரியுள்ளனர். (அ-ஒ-5)

## பெற்றோல்...

சிறிதளவு அதிகரிப்பு செய்ய எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

'எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு தற்போதைக்கு எந்தத் தீர்மானமும் இல்லை. எரிபொருள் விலை அதிகரித்தால் 10 - 15 ரூபா வரையில் மாற்றம் ஏற்படலாம்' என்று காஞ்சன குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மூன்று மாதங்களில் 'கியூ.ஆர்' முறை முற்றாக இல்லாதொழிக்கப்படும் எனவும் அதன் பின்னர் வழமை போன்று மக்களால் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## ஆவணத்தை...

தொடர்பான விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. தாக்குதலாளிகள் கொள்ளையிடும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் ஓர் ஆவணத்தை தருமாறு கோரியே தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

கனடாவிலிருந்து 75 வயதுடைய ஒருவரும் அவரது மனைவியும் அனலைதீவிலுள்ள வீட்டுக்கு வந்து நின்றுள்ளனர். அவர்களது வீட்டில் ஏற்கனவே ஆசிரியர் ஒருவர் தங்கியுள்ளார். அத்துடன் வீட்டு மின்இணைப்பு திருத்தத்துக்காக ஒருவரும் கடந்த 21ஆம் திகதி இரவு அங்கு தங்கியிருந்துள்ளார்.

அன்றைய தினம் இரவு வீட்டுக்குள் வாள்களுடன் மூவர் நுழைந்துள்ளனர். அவர்கள் முகத்தை மூடிக்கட்டியிருந்துள்ளனர். வீட்டில் தங்கியிருந்த ஆசிரியரையும், மின் இணைப்பு திருத்தத்துக்காக தங்கியிருந்தவரையும் கட்டியுள்ளனர். 'உங்களுடன் எங்களுக்கு பிரச்சினை இல்லை. அமைதியாக இருங்கள். இல்லையென்றால் வெட்டிவிடுவோம்' என்று வாள்களுடன் வந்தவர்கள் எச்சரித்துள்ளனர்.

கனடாவிலிருந்து வந்த வீட்டின் உரிமையாளரை வாளால் தாக்கியுள்ளனர். அவரை வெளியில் இழுத்துச் சென்று 'சி.ஐ.டி.யிடம் கொடுக்க கொண்டு வந்த ஆவணம் எங்கே?' என்று கேட்டுத் தாக்கியுள்ளனர். அவரின் மனைவி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர் அணிந்திருந்த தாலிக்கொடி உள்ளிட்ட நகைகள் எதனையும் தாக்குதலாளிகள் கொள்ளையிடவில்லை.

அவர்களின் கனேடிய கடவுச்சீட்டு இருந்த பொதிகளை அவிழ்த்து சோதனையிட்டு அதிலிருந்த ஆயிரத்து 20 கனேடிய டொலர் மற்றும் 25 ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் என்பனவற்றை மாத்திரம் எடுத்துச்சென்றுள்ளனர்.

'குருநகர் அல்லது ஊர்காவற்றுறையிலிருந்து படகு மூலம் அனலைதீவுக்கு தாக்குதலாளிகள் வந்துள்ளார்கள். கனேடிய கடவுச்சீட்டு, கனேடிய டொலர் மற்றும் இலங்கைப் பணத்தை மட்டுமே கொள்ளையடித்துள்ளனர். தாக்குதலாளிகள் இதுவரை கைதாகவில்லை' என்று ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி 'உதயனுக்கு' தெரிவித்தார்.

புலம்பெயர் தேசத்தில் நிலவிய முற்பகைமை காரணமாக இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-125)

காணி தேவை

நல்லூர், கச்சேரி நல்லூர் வீதி, கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் இராச பாதை வீதி ஆகிய இடங்களில் 4 பரப்பு காணி உடனடியாக தேவை.

உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 801 5646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DHL உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲ UK - 1450/= ▲ Australia - 2800/=
Canada Normal - 1200/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். **0777 55 45 28**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 80 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும். வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

**தொடர்பு: 076 46 50 171, 076 911 9371**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச. தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

(CS 23733) 1-6

**தொடர்பு: 076 4350 614, 077 6385 683**


# கீரிமலை முத்துமாரி வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 27

கீரிமலை ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 6ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## STUDENT VISA - 2023

1) Child Education 5–17 years (both parent can go with the Children)
2) Student Visa with the work
   a. Canada work and study review program - IELTS தேவையில்லை
   b. Canada, UK and Australia – IELTS (6 – 6.5)
   c. Europe Countries (Germany,Swiss,Italy,France etc...) IELTS. தேவையில்லை.
   d. Tourist/Visitor Visa ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்

**Application now in process - Register now**
**Minimum qualifications – A/L**

வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.

(CS 23716_X3/6)

Adiyapatham Road, Thirunelvely, Jaffna.. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாவடி, கொக்குவிலை பிறப்பிடமாகவும் உயரப்புலம் மற்றும் இங்கிலாந்தினை வாழ்விடமாகவும் கொண்ட

## அமரர் திரு. கந்தையா கந்தப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யா/ இந்துக்கல்லூரி)

அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டின் நினைவு நாள் 02.03.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இல-82 உயரப்புலம். ஆனைக்கோட்டையில் (உத்துங்க விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும்,நினைவு அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு : சிறிரஞ்சன் - 077 187 9195
அனபாயன் - 077 956 0249
பார்த்திபன் - 074 054 8364

(CS 49281) (3/6)

**கந்தப்பிள்ளை குடும்பத்தினர்**


## வாடகைக்குத் தேவை

கந்தர்மட சந்தியில் இருந்து கோண்டாவில் சந்தி அருகாமையில் கடை அல்லது வீடு வாடகைக்கு இருந்தால் உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 3826099 / 075 7466 000**

## குத்தகைக்குத் தேவை

வான்கள் / கார்கள் குத்தகைக்கு தேவை. **077 489 1279**

(CS 23714)(3/6)

## காணி விற்பனைக்கு

நுணாவில் (A9) பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும். (தரகர் தேவையில்லை) மேலதிக விபரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் சந்திப்பதற்கான நேர ஒழுங்கு மட்டும் T.P தொடர்பாடல் பயன்படுத்தப்படும். உங்கள் பொன்னான நேரத்தை வீணடியாதீர்கள்.

(CS/23674)4,6

**காணி உரிமையாளர்:- 076 690 6272**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தி அருகாமையில் A-9 வீதியிலிருந்து 150 M தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 43 65 814**
**076 48 54 390**

(CS 23737) 1-6

## காணி தேவை

யாழ். நகர் (பஸ்தரிப்பிடத்தை அண்டிய) பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 95 92 628**

(CR 39331) 1-6


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
24.05.1951

மறைவு
29.01.2023

கடந்த 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன் (தேவி)

அவர்களின்அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (28.02.2023) செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.**

எமது குலவிளக்கு நோயுற்றபோது உயரிய வைத்திய ஆலோசனைகளை வழங்கியும் மிகச்சிறப்பான வைத்திய சேவைகளை செய்தமைக்காகவும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியக் குழுவினர்களுக்கும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வைத்தியக் குழுவினர்களுக்கும் எமது இறவா நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். மற்றும் எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், ஊடகங்கள் மூலமும் துக்கங்களை பகிர்ந்துதோருக்கும். அஞ்சலி பிரசுரங்களையும், பதாகைகளையும் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்த உற்றார். உறவினர், நண்பர்களுக்கும் எமக்கு உணவூட்டிய பெருமைக்குரியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(CR 39330) (3/6)

"தேவி வாசா"
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

**குடும்பத்தினர்**
**076 749 0219**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.